நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

**முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் ஜீன் திங்கள் 08 ஆம் நாள் திங்கள்கிழமை

DVC No. 14/2025

CNR NO. TNTT07-002235-2025

| **வ. எண்** | | **விபரங்கள்** |
|---|---|---|
| | | மனுதாரர்கள் விபரங்கள் |
| 1 | பெயர் | 1. பூங்கொடி<br>2. இளங்கோவன்<br>3. முனிஷா<br>**(மேற்படி 2, 3 வது இளவர்கள் மனுதாரர்கள் அவரது தாயாரான 1 வது மனுதாரர் மூலமாக)** |
| 2 | மனுதாரர்களின் கணவர்/தந்தை பெயர் | மாடசாமி |
| | வேலை | – |
| 4 | முகவரி | கதவு எண்.4/304-D, ராஜீவ் நகர், கீழ காலனி, லிங்கம்பட்டி கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். |
| 5 | வயது | 1. 33/2025<br>2. 14 / 2025<br>3. 11 / 2025 |
| | | எதிர்மனுதாரரின் விபரங்கள் |
| 6 | பெயர் | மாடசாமி |
| 7 | தந்தை பெயர்/ கணவர் பெயர் | குருசாமி |

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:13 +0530

| | | |
|---|---|---|
| **8** | வேலை | – |
| **9** | முகவரி | கதவு எண்.4/304–B, ராஜீவ் நகர், கீழ காலனி, லிங்கம்பட்டி கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். |
| **10** | வயது | 37/2025 |
| | **தேதி** | |
| 11 | புகார் | 09.04.2024 |
| **12** | எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்ட விபரம் | 13.10.2025 |
| **13** | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 30.01.2026 |
| **14** | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 06.06.2026 |
| **15** | பராமரிப்பு தொகை, பாதுகாப்பு உத்தரவு | இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, குடியிருப்பு உத்தரவு, பாதுகாப்பு உத்தரவு, பராமரிப்பு தொகை உத்தரவு, செலவுத் தொகை உத்தரவு, இழப்பீடு உத்தரவு ஆகிய உத்தரவுகள் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| **16** | உத்தரவு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர், தூத்துக்குடி மாவட்ட சமூக நல அலுவலர், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோர்களுக்கு இந்த உத்தரவின் நகல் இலவசமாக அளிக்கப்படுகிறது. |
| **17** | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகள் விசாரணையினாலும், எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டதாலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த மனு 16.04.2025 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. வளன் வினோ சிங் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. கோபி அவர்கள் ஆஜராகியும்,

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:18 +0530

எதிர்மனுதாரர் பின்பு எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் ஒருதலை பட்சமாக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

1. இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு பாதுகாப்பு உத்தரவு, குடியிருப்பு உத்தரவு, பராமரிப்பு தொகை உத்தரவு, இழப்பீட்டு உத்தரவு மற்றும் இதர பரிகாரங்களும் கோரி, எதிர்மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவு 12 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## உத்தரவு

**மனுவின் சுருக்கம்**

2. 2, 3 வது மனுதாரர்கள், 1 வது மனுதாரரின் மகன் மற்றும் மகள். எதிர்மனுதாரர், 1 வது மனுதாரரின் கணவர். கடந்த 26.08.2009 அன்று 1 வது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஓட்டப்பிடாரம், ஸ்ரீசிவன் கோவிலில் வைத்து இந்து முறைப்படி நடைபெற்ற திருமணத்தின் போது 1 வது மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகைகள் கொடுத்து திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணத்தின் போது, எதிர்மனுதாரர் லாரி ஓட்டுநராக வேலை செய்து நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.800/– வரை சம்பாதித்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் வேலை முடித்துவிட்டு வரும் போது மது அருந்திக் கொண்டும், வீட்டில் வைத்துக் குடிப்பதற்கும் மது வாங்கிக் கொண்டு வந்துள்ளார். 1 வது மனுதாரர், எதிர்மனுதாரரை கண்டித்தால் எதிர்மனுதாரர் அசிங்கமான வார்த்தைகளால் பேசி 1 வது மனுதாரரை, அடித்துக் கொடுமைப்படுத்தி, இழிவு படுத்தி பேசுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.

3. பின்பு 1 வது மனுதாரரும், எதிர்மனுதாரரும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், லிங்கம்பட்டி கிராமத்தில் தனி வீடு பிடித்து வாழ்ந்து வந்த நிலையில் கடந்த 05.05.2011 ஆம் தேதி 2 வது மனுதாரரும், கடந்த 10.06.2014 அன்று 3 வது மனுதாரரும் பிறந்துள்ளார்கள். எதிர்மனுதாரருக்கும், எதிர்மனுதாரரின் பெற்றோருக்கும் குடியிருப்பு வீடும், விவசாய நிலமும் உள்ளது. அதன் பின்னர் எதிர்மனுதாரர் மீண்டும் குடிப்பழக்கத்தை தொடர்ந்து 1 வது மனுதாரரை அடித்து

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:24 +0530

துன்புறுத்துவதை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தட்டிக் கேட்காமல் இருந்துள்ளார்கள்.

4. மேலும், எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு பராமரிப்பு, அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யாமல், பணம் கொடுக்காமல் குடித்துவிட்டு தூங்குவதையும், மனுதாரை கடுமையாகத் தாக்கி துன்புறுத்தி வந்துள்ளார். மேலும், மனுதாரர்களை நல்ல முறையில் பராமரிக்காமல் எதிர்மனுதாரரின் வீட்டின் அருகில் உள்ள ரஹ்மத்ராணி என்ற பெண்ணுடன் தவறான தொடர்பில் இருந்து கொண்டு 1வது மனுதாரருமன் வீண் சண்டை சச்சரவுகள் செய்து மேற்படி ரஹ்மத்ராணி என்பவருடன் அவரது வீட்டிலேயே குடியிருந்து வந்துள்ளார். மேற்படி ரஹ்மத்ராணியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு எதிர்மனுதாரர், 1வது மனுதாரரை அடித்து துன்புறுத்தியும், 2, 3 வது மனுதாரர்களின் கல்வி செலவுகளுக்கு பணம் கொடுக்காமலும், மைனர் 2, 3 வது மனுதாரர்களை கண்டு கொள்ளாமலும் இருந்து வருகிறார்.

5. மனுதாரர்கள் தற்போது கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார்கள். எதிர்மனுதாரர் வேலை பார்த்து மாதம் ரூ.24,000/- வருமானம் ஈட்டி வருகிறார். மனுதாரர்களுக்கு மாதம் மொத்தம் ரூ.15,000/- பராமரிப்பு தொகையும், மனுதாரருக்கு, எதிர்மனுதாரரின் வீட்டில் தங்குவதற்கு தனி அறை, பாதுகாப்பு உத்தரவிட வேண்டியும், எதிர்மனுதாரரால், மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்கு நஷ்ட ஈடாக எதிர்மனுதாரர் ரூ.1,00,000/-மும், இதர பரிகாரங்களும் வழங்க உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் இந்த மனுவை எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ளார்.

6. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி, இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதால் கடந்த 13.10.2025 அன்று எதிர்மனுதாரர்ரை ஒருதலைபட்சமாக்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில் 1வது மனுதாரர் தனது முதல் விசாரணையை மனுவை ஒத்திசைந்து ஆணையுறுதி பத்திரமாக தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர்கள்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.23 18:05:29 +0530

தரப்பில் ம.சா.ஆ.1 1வது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் திருமண அழைப்பிதழின் அசல், மசா.ஆ.2 2வது மனுதாரரின் பிறப்பு சான்று நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), ம.சா.ஆ.3 3 வது மனுதாரரின் பிறப்பு சான்று நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), மசா.ஆ.4 1வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), ம.சா.ஆ.5 2வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது), ம.சா.ஆ.6 3வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. எதிர்மனுதாரரை ஒருதலைபட்சமாக்கி உத்தரவிடப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிர்மனுதாரர், மனுதாரர்களை குடும்ப வன்முறை செய்து கொடுமை செய்துள்ளதாகவும், மனுதாரர்களுக்கு அவர்களை பராமரிக்க போதிய வருமானம் இல்லை என்றும், எதிர்மனுதாரர், மனுதாரர்களை பராமரிக்க வேண்டியது எதிர்மனுதாரரின் கடமை என்றும், மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்க மனுதாரர்கள் தகுதியானவர் என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் எதுவும் இல்லை என்றும், மனுதாரர்களின் மனுவை ஒத்திசைந்து வாதிட்டுள்ளார்.

10. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி என்னவென்றால், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?**

11. மனுதாரர்கள் தங்களுக்கு சொத்துக்கள் மற்றும் வருமானம் இல்லை என்றும், 1வது மனுதாரருக்கு மாதம் ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை செலவாகுவதாகவும், 2, 3வது மனுதாரர்களுக்கு வருடத்திற்கு ரூ.40,000/- செலவாகுவதாகவும்,

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:36 +0530

எதிர்மனுதாரர் மாதம் ரூ.24,000/- வருமானம் பெறுவதாகவும் சொத்து மற்றும் வருமானம் தொடர்பான ஆணையுறுதிபத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர்கள் மேற்படி சொத்து மற்றும் வருமானம் தொடர்பான ஆணையுறுதி பத்திரத்தில் எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.24,000/- வருமானம் வருவதாக குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக 1வது மனுதாரருக்கு மாதம் ரூ.24,000/- வருமானம் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

12. எதிர்மனுதாரர், 1வது மனுதாரரை துன்புறுத்தி 1வது மனுதாரரையும், 2, 3 வது மனுதாரர்களையும் பராமரிக்காமல் கைவிட்டு விட்டதாகவும், 1வது மனுதாரர் போதுமான வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருவதாகவும் மனுதாரர்கள் தரப்பு வழக்கு உள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட படிவம்-2 மனுவில் மனுதாரர்களுக்கு ரூ.1,00,000/- நஷ்ட ஈடு தொகை தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

13. 1வது மனுதாரர் தனது முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில், எதிர்மனுதாரர் தனது கணவர் என்றும், எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து அடிக்கடி பிரச்சனை செய்து அடித்து தொந்தரவு செய்வதாகவும், எதிர்மனுதாரருக்கு போதிய வருமானம் உள்ளது என்றும், மனுதாரர்களை பராமரிக்க மனுதாரர்களுக்கு போதிய வருமானம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்களின் மனுவிற்கும், முதல் விசாரணை சாட்சியத்திற்கும் பெரிய அளவில் முரண்பாடுகள் இல்லை என்பதாலும், 1வது மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து, எதிர்மனுதாரர் தரப்பில் முரண்பாடுகள் கொண்டு வரப்படவில்லை என்பதாலும் 1வது மனுதாரரின் சாட்சியம் மீது நம்பிக்கை ஏற்படுகிறது.

14. மனுதாரர்களின் மனுவை எதிர்த்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து எந்தவித எதிர்வாதமும் எடுத்துரைக்கப்படவில்லை. எதிர்மனுதாரரின் வருமானம் சம்பந்தமாக எந்த ஆவணமும் மனுதாரர் தரப்பில் குறியிடப்படவில்லை என்பதை வைத்து எதிர்மனுதாரருக்கு போதிய வருமானம் இல்லை என்று தீர்மானிக்க

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:41 +0530

முடியாது. மேலும், எதிர்மனுதாரர், மனுதாரரின் வாதத்தை எதிர்த்து எந்த சாட்சியமும், ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

15. மனுதாரர்கள் தங்களது மனுவிலும், சாட்சியத்திலும் கூறியுள்ள சங்கதிகளை மறுத்துக் கூறி தகுதி படைத்த எதிர்வாதங்களை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் எடுத்துரைக்காமல் ஒருதரப்பாக இருந்து வருவதால், அவற்றை எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக் கொண்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர் ஒருதரப்பாக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்று இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர் லாரி ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.24,000/- வருமானம் பெறுவதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

16. 1வது மனுதாரருக்கு காயம் ஏற்பட்டதாக எந்த ஆவணமும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரருக்கு வருமானம் உள்ளது என்று எந்த ஆவணமும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மசா.ஆ.1 முதல் மசா.ஆ.6 வரையான சான்றாவணங்களை பார்வையிடும் போது 1வது மனுதாரரும், 1வது எதிர்மனுதாரரும் கணவன், மனைவி என்பதும், 1வது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும், 2, 3 வது மனுதாரர்கள் பிறந்துள்ளதும் தெளிவாகிறது.

17. எதிர்மனுதாரர், 1வது மனுதாரரை அடித்து துன்புறுத்தியதாக மனுதாரர் தனது முதல் விசாரணை, ஆணையுறுதி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில், காவல் நிலைய புகார் சம்பந்தமான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருந்து கொண்டு அவருடன் வசித்து வந்துள்ளதாக 1வது மனுதாரர் தரப்பு வழக்கு உள்ளது. அவ்வாறு எதிர்மனுதாரர் பிரிந்து வாழ்வதே 1வது மனுதாரருக்கு மனதளவில் ஏற்பட்ட கொடுமையாகவே கருத வேண்டியுள்ளது. மனுதாரர்களின் மனு, சாட்சியம் மற்றும் ஆவணங்களை பார்வையிடும் போது எதிர்மனுதாரர், மனுதாரர்களை சரியாக பராமரிக்காமல் கொடுமை செய்தது தெளிவாகிறது. எதிர்மனுதாரர் உண்மையில்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:46 +0530

மனுதாரர்களை பராமரித்து கொடுமை செய்யாமல் இருந்திருந்தால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர்களின் வழக்கிற்கு எதிராக தகுந்த எதிர்வாதத்தை எடுத்துரைத்திருப்பார். மனுதாரர்களின் மனுவிற்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் எடுத்துரைக்கப்படவில்லை என்பதால் மனுதாரர்களின் தரப்பு வழக்கின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது.

18. மனுதாரரின் மனு மற்றும் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை கவனமாக ஆராயும் போது தற்போதைய விலைவாசியை கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரர் மாதம் ரூ.24,000/- வருமானம் பெறுவதாக மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி ரூ.15,000/- மொத்த ஜீவனாம்ச தொகை நியாயமானது என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும், மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு தொகை ரூ.1,00,000/- தேவை என்பது மிகுதியாக கருதப்படுகிறது. மேலும், மனுதாரர்களுக்கு குடியிருப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவு தேவைப்படுவதாகவும் தீர்மானிக்கப்படுகிறது. 1வது மனுதாரரின் கணவர் என்ற அடிப்படையிலும், 2, 3 வது மனுதாரர்களின் தந்தை என்ற அடிப்படையிலும் அவர்களை பராமரிக்க வேண்டியது எதிர்மனுதாரரின் கடமை. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றவாணங்கள் மூலமாக மனுதாரர் தரப்பு வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. எனவே, மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் **மனுதாரர்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு** கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்படுகின்றது.

19(1) 1வது மனுதாரர் மற்றும் அவரது இளவர் குழந்தைகளான 2, 3 வது மனுதாரர்களை, எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் குடும்ப வன்முறைக்கு உள்ளாக்கவோ, அல்லது குடும்ப வன்முறை செய்ய தூண்டுதலோ செய்ய கூடாது என எதிர்மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறை பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 18 ன் கீழ் பாதுகாப்பு உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:51 +0530

19(2). மாவட்ட சமுக பாதுகாப்பு அலுவலர், தூத்துக்குடி மாவட்டம் (1) காவல் ஆய்வாளர்கள், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையம், ஆகியோர்கள், மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரரால் எந்தவிதத்திலும் குடும்ப வன்முறையோ, தொந்திரவோ நிகழாமல் பாதுகாப்பு வழங்க உத்திரவிடப்படுகிறது.

19(3). மனுதாரர்களுக்கு கோவில்பட்டி, கதவு எண்.4/304–B, ராஜீவ் நகர், கீழ காலனி, லிங்கம்பட்டி கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியிலுள்ள அவர்களது பங்குரிமை வீட்டில் குடியிருக்க குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 17 ன் கீழ் குடியிருப்பு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மேலும் மேற்படி வீட்டில் மனுதாரர்கள் குடியிருப்பதை எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் தடுக்கவோ, தொந்தரவு செய்யவோ கூடாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மேற்படி வீட்டை விற்கவோ, வேறு வில்லங்கம் செய்யவோ எதிர்மனுதாரருக்கு எந்தவித தடையும் கிடையாது. அவ்வாறு எதிர்மனுதாரர் மேற்படி வீட்டை விற்கவோ அல்லது வேறு வில்லங்கமோ செய்யும் பட்சத்தில் எதிர்மனுதாரர் அவரது சொந்த செலவில் ஒரு வாடகை வீட்டை மனுதாரர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு எதிர்மனுதாரர் தவறும் பட்சத்தில் எதிர்மனுதாரர் வீட்டின் வாடகை செலவாக மொத்தம் மாதம் ரூ.3,000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்று குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 19(8)ன் கீழ் உத்திரவிடப்படுகிறது.

19(4). எதிர்மனுதாரர் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருமானம் பெறுவதால், எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு மாத பராமரிப்பு தொகையாக தலா ரூ. 5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ. 15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி வரை கொடுக்க வேண்டிய பராமரிப்பு நிலுவை தொகையை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள், 1வது மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:05:57 +0530

வேண்டும் என்றும், இந்த உத்தரவிற்கு பிறகு ஒவ்வொரு மாதமும் கொடுக்க வேண்டிய மாத பராமரிப்பு மொத்த தொகை ரூ.15,000/—த்தை( ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஒவ்வொரு மாதமும் ஆங்கில மாதம் 5—ம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு செலுத்தவேண்டும் என்றும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20(3)ன் கீழ் உத்திரவிடப்படுகிறது. 2 வது மனுதாரருக்கு 18 வயது ஆகும் வரையிலும், 3 வது மனுதாரருக்கு திருமணம் ஆகும் வரை மட்டுமே அவர்கள் எதிர்மனுதாரரிடம் பராமரிப்பு தொகை பெற முடியும்.

19(5) மனுதாரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீட்டு தொகையாக எதிர்மனுதாரர் மொத்தம் ரூ.25,000/—(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)த்தை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மனுதாரர்களுக்கு மொத்தமாக கொடுக்க வேண்டுமென குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 22 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

19.(6). மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக எதிர்மனுதாரர் மொத்தம் ரூ. 5,000/— த்தை (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கொடுக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

20. இந்த உத்தரவின் நகலினை மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரருக்கும் இலவசமாக வழங்க உத்திரவிடப்படுகிறது.

21. இந்த உத்தரவின் நகலினை மாவட்ட சமுக பாதுகாப்பு அலுவலர், தூத்துக்குடி மாவட்டம், காவல் ஆய்வாளர்கள், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையம், ஆகியோர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்ப உத்திரவிடப்படுகிறது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:06:02 +0530

22. மேலும், மேற்படி உத்தரவுகளை எதிர்மனுதாரர் மீறும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக மனுதாரர்கள் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவு 31ன் கீழ் மனு செய்து வழக்கு தொடரலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 08 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:06:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திருமதி. பூங்கொடி |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1வது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் திருமண அழைப்பிதழ் – 26.08.2009 | 30.01.2026 | ம.சா.ஆ.1 | ம.சா.1 | அசல் |
| 2 | 2வது மனுதாரரின் பிறப்பு சான்று – 25.07.2011 | 30.01.2026 | ம.சா.ஆ.2 | ம.சா.1 | நகல் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) |
| 3 | 3வது மனுதாரரின் பிறப்பு சான்று – 18.06.2014 | 30.01.2026 | ம.சா.ஆ.3 | ம.சா.1 | நகல் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) |
| 4 | 1வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – 22.09.2020 | 30.01.2026 | ம.சா.ஆ.4 | ம.சா.1 | நகல் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) |

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:06:12 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 2 வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | 30.01.2026 | ம.சா.ஆ.5 | ம.சா.1 | நகல்<br>(அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) |
| 6 | 3 வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | 30.01.2026 | ம.சா.ஆ.6 | ம.சா.1 | நகல்<br>(அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :– இல்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.23 18:06:16 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி